பக்கங்கள்: ஆறு

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 10 வள்ளுவர் ஆண்டு 2026 ஆவணி 22 வியாழக்கிழமை (07-09-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 286



ஜோன் பொஸ்கோ பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ள ஜரிஷ் மோனா பயணிகளில் சிலர்.

## மாலுமிகளின் விடுதலை குறித்து பேச்சுவார்த்தை

யாழ்ப்பாணம், செப். 7

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள ''ஜரிஷ் மோனா'' கப்பலின் மாலுமிகள் எட்டு பேரின் விடுதலை குறித்து விடுதலைப் புலிகளுக்கும், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் நேற்று

( 5 ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகளை கட்டித் தழுவி சுகம் விசாரித்த உறவினர்

யாழ்ப்பாணம், செப். 7

நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த ''ஜரிஷ் மோனா'' கப்பல் பயணிகளை அவர்களின் உறவினர்கள் சந்தித்தனர். பலர் கண்ணீர் மல்கக் கட்டி அணைத்து தமது சுக நலன்களைப் பகிர்ந்துகொண்டனர்.

[ 5 ஆம் பக்கம் பார்க்க]

# “ஜரிஷ்மோனா” கப்பல் பயணிகள் யாழ்ப்பாணம் கூட்டி வரப்பட்டனர்

## செஞ்சிலுவை அதிகாரிகள் சந்திப்பு குசலம் விசாரிக்க திரண்ட உறவினர்

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 7

“ஜரிஷ் மோனா” கப்பலில் பிரயாணம் செய்த 121 பயணிகள் நேற்று விடுதலைப் புலிகளால் யாழ்ப்பாணத்துக்குக் கூட்டி வரப்பட்டனர்.

யாழ். ஜோன் பொஸ்கோ மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள இவர்களை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினர் நேற்று பிற்பகல் 2 மணியளவில் சென்று பார்வையிட்டனர். அத்தோடு அவர்களின் விவரங்களையும் பதிவு செய்தனர்.

இதேவேளை நீண்ட காலமாக இவர்களைப் பிரிந்திருந்த உறவினர்கள், குசலம் விசாரிப்பதற்காக பெரும் எண்ணிக்கையில் திரண்டு வந்தனர். சந்தித்து உரையாடினர்.

கடந்த 29 ஆம் திகதி தொடக்கம் பயணிகள் அனைவரும் முல்லைத்தீவில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் கிளாலி ஊடாக நேற்றுக் காலை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

ஜோன் பொஸ்கோ மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள பயணிகளை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலகப் பிரதிநிதி ஜோர்ச் குன்ஸ் தலைமையிலான அதிகாரிகள் குழுவினர் பார்வையிட்டனர்.

பயணிகளின் விவரங்களை விசேட படிவங்களில் செஞ்சிலுவைக் குழுவினர் பதிவு செய்தனர்.

பயணிகளின் விருப்பப்படி அவர்கள் தமது பகுதிகளுக்குத் திரும்புவதற்குத் தேவையான போக்குவரத்து வசதி

[5 ஆம் பக்கம் பார்க்க]



நயினாதீவைச் சேர்ந்த இரு பெண்கள் தாம் பிரசவித்த குழந்தைகளுடன் காணப்படுகின்றனர்.

[மேலும் செய்திகள், படங்கள் 2 ஆம், 5 ஆம், 6 ஆம் பக்கங்களில்]

### ''ஜரிஷ்மோனா'' மாலுமிகளுக்குப் பதிலாக

## இரு பெண் கடற்புலி போராளிகளை விடுவிக்குமாறு புலிகள் நிபந்தனை

யாழ்ப்பாணம், செப்.7

''ஜரிஷ்மோனா'' கப்பல் மாலுமிகள் எட்டுப் பேரையும் விடுதலை செய்ய விடுதலைப் புலிகள் அரசுக்கு நிபந்தனை விதித்துள்ளனர்.

கடற்படையினரால் காங்கேசன்துறை துறைமுகப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட இரு பெண் கடற்புலிகளை இவர்களுக்காகப் பரிமாறிக்கொள்ள விடுதலைப் புலிகள் முன்வந்துள்ளனர்.

இவ்விரு பெண் கடற்புலி[illegible] ''எடித்தரா'' கப்பல் மீது கடற்புலிகள் நடத்திய தாக்குதலின் போது கைது செய்யப்பட்டனர்.

''ஜரிஷ்மோனா'' கப்பல் மாலுமிகள் எட்டுப்பேரும்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## நான்கு பீரங்கிகளை புலிகள் கைப்பற்றினர்

யாழ்ப்பாணம், செப். 7

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் கடந்த 29 ஆம் திகதி நடத்திய வெற்றிகரத் தாக்குதலின் போது தகர்க்கப்பட்ட இரு அதிவேக டோறா பீரங்கிப்படகுகளில் இருந்து நான்கு பீரங்கிகள் உட்படப் பல நவீன கனரக ஆயுதங்களைக் கடற்புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

இச் சம்பவத்தில் இஸ்ரேல் தயாரிப்பான கப்பர் டோறா

( 6 ஆம் பக்கம் பார்க்க)

## நவீன ராடர் கருவிகள் கடற்புலிகள் வசம்!

யாழ்ப்பாணம், செப். 7

முல்லைத்தீவுக் கடலில் தாக்கி அழிக்கப்பட்ட இரு ''டோறா'' படகுகளில் இருந்த நவீன ராடர் சாதனங்களை கடற்புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கி வேட்டு சத்தம் கேட்டதும் கப்பலின் தளத்தில் படுத்து விட்டோம்

## தமக்கு நேர்ந்த அனுபவம் குறித்து நெடுந்தீவு வாசி

யாழ்ப்பாணம், செப். 7
''திருகோணமலையில் இருந்து சம்பவதினம் தீவுப் பகுதியை நோக்கிக் கப்பலில் சென்றுகொண்டிருந்த சமயம்—

திடீரென துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன. கப்பலில் இருந்த பெண்கள் ''ஐயோ கடவுளே'' என்று அவலக்குரல் எழுப்பினர். பீதியினால் கப்பலின் தளத்தில் நாங்கள் படுத்துவிட்டோம்.''

''ஐரிஷ்மோனா'' கப்பலில் பயணம் செய்த நெடுந்தீவைச் சேர்ந்த எஸ். அந்தோனிப்பிள்ளை (47 வயது) என்பவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வெளிநாட்டில் பணியாற்றும் அவர், பத்து வருடங்களின் பின் தமது சொந்த இடமான நெடுந்தீவு செல்வதற்காக இக்கப்பலில் பயணம் செய்திருந்தார்.

தமது அனுபவத்தை விவரிக்கையில் அவர் மேலும் கூறியதாவது;

நடுக்கடலில் கப்பல் சென்றுகொண்டிருந்த சமயம் கப்பலுக்கு சமீபமாக துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன.

கப்பலில் இருந்த பெண்கள் ''ஐயோ கடவுளே'' என்று அவலக்குரல் எழுப்பினர்.

கடற்படையினர் தான் தாக்க வருகிறார்கள் என நினைத்து அவர்கள் அவலக்குரல் எழுப்ப எல்லோரும் கப்பலின் அடித்தளத்தில் குப்புறப்படுத்தோம்.

கப்பலில் ஏறிய போராளிகள் படுத்திருந்த எல்லோரையும் எழுந்து இருக்குமாறு கூறினர்.

பின்னர் கப்பலை அவர்களே கட்டளையிட்டு அழைத்துச் சென்றனர்.

அக்கப்பல் செல்லும் பாதைக்கு சமீபமாக கண்ணுக்கு தெரிந்த தூரத்தில் கப்பல் ஒன்று தீச்சுவாலையுடன் எரிவதைக் கண்டேன்.

மறுநாள் காலை எம்மை கப்பலில் இருந்து இறக்கிய போராளிகள் ஒரிடத்தில் தங்க வைத்தனர். உணவு உடுபுடைவைகள் தந்து நன்றாகப் பராமரித்தார்கள் என்றார்.

[இ-3]


### விலங்கியல்

**R. ஈஸ்வரதாசன்**
B. Sc. (Cey.) Dip-in-Ed.

**96A/L 97A/L**
வகுப்புகள் யாவும்
8 ஆம் திகதி
வெள்ளிக்கிழமை
வழமையான நேர அட்டவணையின் படி நடைபெறும்.

★ 95 A/L பரீட்சையில் தோற்றியவர்களுக்கான புள்ளியிடும் திட்டம் (Marking Scheme) பற்றிய விளக்க வகுப்பு, வெள்ளி (08-09-95) 8 a.m. Science Centre இல் நடைபெறும்.

பரீட்சைக்கு தோற்றிய தோன்றாத மாணவர்கள் யாவரும் சமுகமளிக்கலாம்

**P' NEW SCIENCE CENTRE & SCIENCE COLLEGE**
JAFFNA.

(சி-2190)



**P' நியு சயன்ஸ் சென்ரர்**
எழிலகம் முன் யாழ்ப்பாணம்.

**கணித - உயிரியல்**
**மீட்டல் வகுப்புக்கள்**
(95 A/L பரீட்சைக்கு தோற்றியவர்களுக்கானது)

ஆரம்பம்: **09 - 09 - 1995**
சனி 8 a.m.

நேர அட்டவணையை நிறுவனத்தில் பெறலாம்.

– நிர்வாகி.

[சி-2189]


## ஸ்ரீ ராகவேந்திர இசையாராதனை

யாழ்ப்பாணம், செப். 7
நல்லூரில் உள்ள ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகளின் பிருந்தாவன பிரவேச விழா இசையாராதனை நிகழ்ச்சிகளின் தொடரில் இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிமுதல் செல்வி சுனீத்திரா யேசுதாசன், செல்வி சுகன்யா சிவானந்தன் ஆகியோர் பாடுவர்.

(ஐ)

## இலங்கை மாணவன் சுட்டுக் கொலை

கொழும்பு, செப். 7
அமெரிக்க ஸ்டீக்வோட்டர் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் இலங்கை மாணவர் ஒருவர் சக மாணவர் ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அனுரத்த குணவர்த்தன (வயது 20) என்ற அந்த மாணவர், பல்கலைக்கழக விடுதியில் வைத்து கொல்லப்பட்டார். [எ]

## மிருசுவில் இளைஞருக்கு நேர்ந்த கதி

தென்மராட்சி, செப். 7
இரண்டு வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் படையினரால் கைது செய்யப்பட்டு சித்திர வதைக்கு உள்ளாக்கப்பட்டு பின்னர் கடந்த மார்ச் மாதம் விடுவிக்கப்பட்ட இளைஞர் நோயுற்று கொழும்பில் மரணமான சம்பவம் கடந்த வாரம் இடம் பெற்றது:

மிருசுவில் கரம்பகத்தைச் சேர்ந்த மயில்வாகனம் சிவலிங்கம் (வயது 27). என்னும் இந்த இளைஞரின் சடலம் இங்கு எடுத்து வரப்பட்டுள்ளது. [ஒ-117]

## சந்திரிகாவை கொல்ல திட்டம்:

# மூவர் கைதாகியதாக பொலீஸார் தெரிவிப்பு

லண்டன், செப். 7
இந்த ஆண்டு இறுதிக்குள் ஜனாதிபதி சந்திரிகாவை கொலை செய்யும் நோக்குடன் செயற்பட்ட மூன்று உறுப்பினர்களை தாம் கைது செய்துள்ளதாக பொலீஸார் தெரிவித்தனர்.

இவர்களில் ஒருவர் கொலை செய்யும் முறை குறித்து சிங்கப்பூரில் உள்ள இளைப்பாறிய இராணுவ அதிகாரி ஒருவரிடம் ஆலோசனை பெற்றதாக பொலீஸார் தெரிவித்தனர்.

ஜனாதிபதியையோ, அல்லது பிரதி பாதுகாப்பு அமைச்சரையோ கொல்வதே அவர்களின் இலக்கு என்றும்—

கைதான இளைஞர்களில் மற்றும் ஒருவர் ஜனாதிபதிக்கு போடப்பட்டுள்ள பாதுகாப்பு வலயத்துக்குள் பத்திரிகையாளர் என்ற முறையில் நுழைந்தார் என்றும் — பொலீஸார் தெரிவித்தனர். (இ-க-3-6)

## சிவானந்த மகரிஷியின் ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம் செப். 7
சுவாமி சிவானந்த மகரிஷியின் 108 ஆவது ஜெயந்தி விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணி முதல், நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும். அதில் பூஜை, பிரார்த்தனை, சொற்பொழிவு என்பனவும் இடம் பெறவுள்ளன. (எ)

# மரண அறிவித்தல்கள்

## சிவலிங்கம் சிவகுமாரன்

(உதவிப் பொறியியலாளர் – தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை, யாழ்ப்பாணம்)

இடைக்காடு அச்சுவேலியைச் சேர்ந்த சிவலிங்கம் சிவகுமாரன் (உதவிப் பொறியியலாளர், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை யாழ்ப்பாணம்) 05 – 09 – 95 செவ்வாய்க்கிழமை காலமானார்.

இவர் இந்திராணியின் அன்புக் கணவரும், செந்தில் குமரன் (யா / இந்துக் கல்லூரி), வஜிதா, லதானி (யா / இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், காலஞ்சென்ற புகையிரத நிலைய அதிபர் சிவலிங்கம் (இடைக்காடு), செல்லம்மா ஆகியோரின் அன்பு மகனும், தோப்பு அச்சுவேலியைச் சேர்ந்த இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர் செல்லையா செல்லம்மா கனடா) ஆகியோரின் மருமகனும், கணேசமணி, செல்வநாதன், பொன்னிசன், முருகானந்தன், நிர்மலா ஆகியோரின் சகோதரனும், குகதாசன் (குகன் கல்வி நிலையம் ஆவரங்கால்), சரோசா, தெய்வராணி, உமா, ஜெயராணி (கனடா), ரஞ்சனி, சிவேந்திரன், சிவபாலன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (6-9-95) புதன்கிழமை 13/3, நாயன்மார் வீதி, நல்லூர் என்ற முகவரியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. கணேசமணி
(சகோதரன்)

(38331)

## திருமதி பகவதி விஸ்வலிங்கம்

திருமதி பகவதி விஸ்வலிங்கம் (6.9.95) அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற விஸ்வலிங்கத்தின் மனைவியும், திருஞானம், புனிதமலர், பத்மாவதி, மனோரஞ்சிதம் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை – யோகாம்பிகை தம்பதிகளின் மகளும், கந்தசாமி, இராசலட்சுமி, காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, இராசரத்தினம், குணரத்தினம் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (7.9.95) இன்று பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. சிறி
(மருமகன்)

185/9, கில்னர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(38428)

## மயில்வாகனம் கருணாகரன்

(கண்ணன்)

அனலைதீவைப் பிறப்பிடமாகவும், விங்கநகர் – திருகோணமலையில் வசித்தவருமான மயில்வாகனம் கருணாகரன் (கண்ணன்) 28-8-95 இல் முல்லைத்தீவில் அகால மரணமானார்.

இவர் தந்தையார் மயில்வாகனம் (இலங்கை துறைமுக அதிகாரசபை) நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், அன்பழகன், சுபாஜினி, அருணன், மிதுலா, கிரிதரன் ஆகியோரின் சகோதரரும், க. கந்தையா காலஞ்சென்ற இலட்சுமி தம்பதியினரின் பேரனும், வேலும் மயிலும் அவர்களின் பெறாமகனும், சண்முகநாதன் இராஜேஸ்வரி (மகாதேவி) யினரின் மருமகனும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வேலும் மயிலும்
(பருத்தியடைப்பு)
சிறியதந்தை

60, பாங்சால் வீதி,
முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(38432)


உ
சிவமயம்

## ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!
நிகழும் யுவ வருடம் ஆவணி 25ஆம் நாள் (10 – 09 – 95) ஞாயிற்றுக்கிழமை பகல் 12மணி 40நிமிடம் தொடக்கம் 2மணி 45நிமிடம் வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

| எங்கள் புத்திரன் | எங்கள் புதல்வி |
|---|---|
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| **மகேந்திரன்** | **நிர்மலாதேவி** |
| (யாழ் எரிக்கணேஸ் நிறுவனம்) | |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

இறையருளால் மணமகள் இல்லத்தில் திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டிருப்பதால் அத்தருணம் தாங்களும் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறும், 11 – 09 – 95ஆம் திகதி மணமகனில்லத்தில் பி. ப. 4 – 6 மணிவரை நடைபெறும் தேநீர் விருந்துபசாரத்திலும் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்

(இரு வீட்டார் அழைப்பு)

★ இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும் ★

திரு. திருமதி வ. துரை,
கைதடி மேற்கு,
கைதடி.

திரு. திருமதி [illegible]
[illegible]
கைதடி

(8726)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர், கிளை நூலகம்,

### நோய்த் தடுப்புப் பணியை மேற்கொள்ள

# யுத்த நிறுத்தம் கோருகிறது உலக சுகாதார நிறுவனம்

கொழும்பு, செப். 7

இலங்கையில் பாரிய நோய்த்தடுப்பு இயக்கம் ஒன்றை மேற்கொள்ள உலக சுகாதார ஸ்தாபனம் விரும்புகிறது.

அதற்கு வசதியாக நாட்டில் தற்காலிக யுத்த நிறுத்தம் ஒன்றை அமுல்படுத்துமாறு கொழும்பில் உள்ள உலக சுகாதார ஸ்தாபன பிரதிநிதி பீற்றர் இச் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது பல வித நோய்கள் பரவிவருகின்றன.

இவற்றைத் தடுக்க சுகாதார நிறுவனங்களும், சுகாதார அமைச்சும் பல முயற்சிகளை எடுத்து வருகின்றன.

இந் நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்த உலக சுகாதார ஸ்தாபனம் விருப்பம் தெரிவித்துள்ளது.

ஆனால் நாட்டில் தற்போது நடைபெறும் யுத்தம் அதற்குத் தடையாக இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

(எ-ஐ)

### வெள்ளை வானில் வந்தோர் மிரட்டல்:

# திருமலை ஐ. நா. தூதரகத்தில் 60 தமிழ் குடும்பங்கள் தஞ்சம்!

கொழும்பு, செப். 7

திருகோணமலை மாவட்டத்தில் பல இடங்களில் வெள்ளை வானில் வந்தோரின் மிரட்டல் காரணமாக சுமார் 60 தமிழ்க்குடும்பங்கள் இடம்பெயர்ந்து அங்குள்ள அகதிகளுக்கான ஐ நா. தூதரகத்தில் தஞ்சம் அடைந்துள்ளதாகத் தெரியவருகிறது.

பெரியகுளம், கோணேஸ்வரபுரம் ஆகிய பகுதிகளில் மீளக்குடியேறிய தமிழ்க் குடும்பங்களே இதனால் மீண்டும் இடம்பெயர்ந்துள்ளன.

அத்துடன் இக்பால் கிராமத்தில் உள்ள முஸ்லிம் மக்களும் இடம்பெயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

திருகோணமலையில் ஸ்ரீலங்கா படையினர் வெளியேறிய பகுதிகள் மீது உத்தியோகப்பற்றற்ற பொருளாதாரத்தடை அமுல்செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் விமான மற்றும் ஷெல் தாக்குதல்கள் நடப்பதாகவும் பத்திரிகை மேலும் தெரிவித்தது

(எ-3)

# கடற்படையின் இழப்பை குறைத்து மதிப்பிடமுடியாது

### நாடாளுமன்றில் எம். பி. கவலை

கொழும்பு. செப். 7

அண்மையில் கடற்படையினருக்கு ஏற்பட்ட இழப்புகளைக் குறைவாக மதிப்பிட்டு விட முடியாது.

ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான பி. தயாரத்தினா இவ்வாறு தெரிவித்தார்.

அவசரகாலச் சட்ட நீடிப்பு தொடர்பான விவாதத்தின் போது நாடாளுமன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கிழக்கு பகுதியின் பாதுகாப்பில் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

(ஐ-எ)

யாழ்ப்பாணக் கல்லூரி
தமிழ் மன்றம்
நடத்தும்



மகாகவி
சுப்பிரமணிய பாரதி விழா

செப்டம்பர் மாதம்
11ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10-30 மணிக்கு
வட்டுக்கோட்டை ஒட்லி மண்டபத்தில்
நடைபெறும்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்
பாரதி பற்றி பேசுவார்கள்

பாரதி அன்பர்கள் வந்து சிறப்பிக்குமாறு
அழைக்கப்படுகின்றனர்.

செயலாளர்,
தமிழ் மன்றம்,
யாழ்ப்பாணக் கல்லூரி.

(சி-2187)

### வாவிகளில் மர்மச் சடலங்கள்:

# இரு சப்இன்ஸ்பெக்டர்களை தேடி சி.ஐ.டி. வலை விரிப்பு

கொழும்பு, செப். 7

ஆறுகளில் மிதந்து வரும் மர்மச் சடலங்கள் தொடர்பாக, மேலும் இரு சப்-இன்ஸ்பெக்டர்கள், இரகசிய பொலீஸாரால் தேடப்பட்டு வருகின்றனர்.

கடவத்தையைச் சேர்ந்த இந்த இரு பொலீஸாரும் தற்போது தலைமறைவாகி உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது

இக் கொலைகள் தொடர்பாக விசேட அதிரடிப்படை சப்-இன்ஸ்பெக்டர், ஜனாதிபதியின் முன்னாள் மெய்ப் பாதுகாவலர் உட்பட பல அதிரடிப்படையினரும் வேறும் பலரும் கைது செய்யப்பட்டுள்ளமை தெரிந்ததே.

இவ்வாறு பலர் கைது செய்யப்பட்ட பின்னரும் இன்னமும் பல சடலங்கள் உருக்குலைந்த நிலையில் வாவிகளில் கண்டெடுக்கப்படுகின்றன.

அண்மையில் பாணந்துறை பொல்கொட வாவியில் ஒரு சடலமும், நாரஹேன்பிட்டியில் கால்வாய் ஒன்றில் இரண்டு சடலங்களும் இவ்வாறு மிதந்து வந்தன.

மர்மச் சடலங்கள் தொடர்பாக முக்கிய நபர்கள் பலர் கைதான பின்னும், மீண்டும் சடலங்கள் மிதக்கத் தொடங்கியிருப்பது பொலீஸ் வட்டாரங்களில் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

### கொழும்பில் தமிழ் இளைஞர் சடலம்

பம்பலப்பிட்டி சாகர வீதியில் கடற்கரை யோரமாக இனந்தெரியாத இளைஞன் ஒருவரின் சடலத்தை பம்பலப்பிட்டி பொலீஸார் கடந்த வியாழக்கிழமை கண்டெடுத்துள்ளனர்.

25க்கும் 35க்கும் இடைப்பட்ட வயதையுடையவராகத் தோற்றமளிக்கும் அந்த இளைஞர் ஒரு தமிழராக இருக்கலாம் எனப் பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

### புலிகளின் குரல் வானொலியில்

07 – 09 – 1995

வியாழன் இரவு

- ★ 8-02 — சொல்லுங்கள் பார்க்கலாம்
- ★ 8-10 — நோய்தீர்க்கும் மூலிகைகள்
- ★ 8-20 — உழைப்போம் உயர்வோம் - நிகழ்ச்சியில் "துரித நீர்வள மேம்பாட்டுத்திட்டம்" உரைச்சித்திரம்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — மொழியும் வாழ்வும்
- ★ 8-50 — எங்களின் தேசம்

08 – 09 – 1995

வெள்ளி காலை

- ★ 7-02 — மாவீரவணக்கம்
- ★ 7-15 — மணியாரம்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-45 — தாயகப்பாடல்கள்

### தமிழீழ வானொலியில்

வியாழன் மாலை

- ★ 5-01—சிந்தனைச்சிதறல்
- ★ 5-02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — மழலைகளுக்காக
- ★ 5-30 — இசையும் கதையும்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
- ★ 6-02 — பொன் விளையும் பூமி
- ★ 6-10 — செய்திகள்
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — கேள்வி - பதில் விளையாட்டுத் தொடர் பாவலை

# உயர் நீதிமன்றத்தை ஜனாதிபதி அவமதித்தாராம்

### சட்டத்தரணிகள் ஆட்சேபம்

கொழும்பு, செப். 7

ஜனாதிபதி நீதித்துறையில் தலையிட்டார் என்று குற்றம் சாட்டும் பிரேரணை ஒன்றை ஸ்ரீலங்கா சட்டத்தரணிகள் சங்கம், நாளை மறுதினம் சனிக்கிழமை கூடவுள்ள அதன் விசேட கூட்டத்தில் கொண்டுவர உள்ளது.

சமீபகால மதுபான லைசென்ஸ் சம்பந்தமான வழக்குகளில் வழங்கப்பட்ட தீர்ப்புகள் [illegible] ஆலோசனைக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை என்று ஜனாதிபதி அண்மையில், தொலைக்காட்சி மற்றும் வானொலிப் பேட்டிகளில் தெரிவித்திருந்தார்.

மேற்படி பேட்டிகளில் உயர் நீதிமன்றம் குறித்து ஜனாதிபதி தெரிவித்த கருத்துக்கள் நீதிமன்றத்தை அவமதிப்பதாக உள்ளன என்று சட்டத்தரணிகள் பலரும் ஆட்சேபம் தெரிவித்தனர்.

(எ-ஐ)

### பாடசாலை இடமாற்றம்

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி தற்போது சுதுமலை சின்மய பாரதி வித்தியாலயத்தில் காலை வேளை இயங்கத் தொடங்கியுள்ளதாக அதிபர் அறிவிக்கிறார்.

(ஒ)

# பல்கலைக்கழகங்களுடன் பல்கலைகல்லூரி இணையும்

கொழும்பு, செப். 7

இணைந்த பல்கலைக்கழக கல்லூரி முறை அடுத்த ஆண்டு முதல் நீக்கப்பட்டு விடும் என்று கல்வி, உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தற்போது நாட்டில் 11 இணைந்த பல்கலைக்கழக கல்லூரிகள் உள்ளன.

இவற்றில் ஆறு கல்லூரிகள் அனுராதபுரத்திலும், சப்பிரகமுவவிலும் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள இரு பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்படும்.

ஏனைய ஐந்து இணைந்த பல்கலைக்கழக கல்லூரிகளும் சம்பந்தப்பட்ட ஏனைய மாகாணங்களில் உள்ள தேசிய பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்படும். (எ-ஐ)

### வலி. மேற்கு இராணுவ நடவடிக்கையை தொடர்ந்து

# வன்னிக்கு இடம் பெயர்ந்த மக்கள் விவசாயத்தில் பெருமளவில் ஈடுபாடு

யாழ்ப்பாணம் செப். 7

வலிகாமம் மேற்குப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து அங்கிருந்த பல ஆயிரக்கணக்கான விவசாயிகள் வன்னி பெரு நிலப் பரப்புக்கு இடம் பெயர்ந்து அங்கு விவசாய முயற்சியில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர்.

அண்மையில் அளவெட்டி, இளவாலை, அல்லாரை, பிரான்பற்று, விளான், பண்டத்தரிப்பு, மாதகல் மற்றும் வலிகாமப் பிரதேசத்தில் இராணுவ நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்தன.

அதன்போது வயல் நிலங்கள், பயிர்கள் எல்லாம் இராணுவத்தால் துவம்சம் செய்யப்பட்டது.

அதேசமயம் அப் பகுதிகளை நோக்கி இராணுவத்தினர் தொடர்ந்தும் ஷெல் வீச்சுக்களை நடத்தி வருகின்றனர். இதனால் அப் பகுதிகளில் தங்கியிருக்க மக்கள் அஞ்சி அங்கிருந்து வெளியேறினர்.

அவர்களுள் சுமார் 5 ஆயிரம் பேர் கிளிநொச்சிக்கு இடம் பெயர்ந்தனர். மேலும் பல நூற்றுக்கணக்கானோர் முல்லைத்தீவுக்குச் சென்றனர்.

இவர்கள் தமது தொழில்களை இழந்த நிலையில், ஜீவனோபாயம் கருதி தாம் இடம்பெயர்ந்து தங்கியுள்ள பிரதேசங்களிலேயே மும்முரமாக விவசாயத்தில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

தமிழ் தட்டச்சு இயந்திரங்கள், கல்டா, ரெமிங்டன் விற்பனைக்குண்டு, தொடர்பு:- மருதம் 66, மணிக்கூட்டு வீதி, (ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம். (38419)

### மணமகன் தேவை

யாழ். இந்து, அரசாங்கத்தில் எழுதுநர், திருவோணம், உதயத்தில் செவ்வாய், 33 வயது, அழகிய பெண்ணிற்கு தகுந்த மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். அரச அல்லது தனியார்துறையில் தொழில்புரிவோர் விரும்பத்தக்கது. இல. 840, மே/பா உதயன். (38402)

### இடமாற்றம்

டாக்டர் சுப்பிரமணிய வீதி சுன்னாகத்தில் இயங்கி வந்த வைத்திய கலாநிதி P. அருளப்பன், சுதேச வைத்திய சாலையின் சேவை தற்போது கோப்பாய் தெற்கு, கோப்பாய் மாதாகோவில் சமீபமாக (பருத்தித்துறை வீதி) நடைபெறுகின்றது. தகவல்: வைத்தியர். (38392)

### சோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுத பலன்பார்க்க கல்வி, திருமணம், தொழில், எதிர்கால பலன், விவாகப் பிரச்சினைகள் செவ்வாய் ராகு தோசம் நீங்க ஜாதகக் குறிப்புடன் வரவும். ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், இல. 158, கோவில் வீதி, நல்லூர். (38420)

### தவறிவிட்டது

25-8-95 நல்லூர்த் தீர்த்தத் திருவிழாவன்று கோயில் உள் வீதியில் தாலிக்கொடி (தாலியுடன்) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ள ..ம். தகுந்த சன்மானம் வழங்கப்படும். ச. கணேசபிள்ளை, இல. 100/1, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (38408)

## G. A. Q. 1St IN COM (வெளிவாரி)

யாழ். பல்கலைக்கழகத்தினால் மேற்கூறப்பட்ட பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

★ இதற்கான விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.

விவரங்களுக்கு
S. அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்
(சி-2179)

## நீங்காத நினைவினிலே

ஐந்தாம் ஆண்டு நினைவினில் எட்டாம் ஆண்டு நினைவினில்




அமரர்
**மு. திருநாவுக்கரசு**
(ஆர்மோனிய சக்கரவர்த்தி)
மலர்வு: 30 – 10 – 1943
உதிர்வு: 03 – 09 – 1990

அமரர்
**தி. ஜெயாதரன்**
மலர்வு: 01 – 02 – 1971
உதிர்வு: 30 – 05 – 1987

திதி: 07 – 09 – 1995

### ஐந்தாம் ஆண்டு நினைவினிலே

கொடியிழந்த மலரினைப் போல் வாடுகின்றேன்
விடிவிழந்த உலகினைப் போல் ஆகிவிட்டேன்
புவிதனிலே உமைப் பிரிந்து கலங்குகிறேன்
ஐந்தாண்டு காலமாய் நினைவுடனே வாழுகின்றேன்

மனைவி, பிள்ளைகள்.

### எட்டாம் ஆண்டு நினைவினிலே

பெற்றவள் யான் நின் பிரிவால் வாடுகின்றேன்
பிரியமுள்ள சோதரரும் உனையெண்ணிக் - கலங்குகிறார்
இத்தரையில் உன்வதனம் இனியெப்போ காண்போம்
நித்திரையில் சென்றாலும் உன்நினைவைக் - கொள்வோம்.

தாய், சகோதரர்கள்.

4, நொத்தாரிஸ் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
[illegible]

## உலக சைவ மாநாடு

உலக சைவப் பேரவையின் நான்காவது பொதுச் சபைக் கூட்டமும் உலகசைவமாநாடும் கொழும்பு இராமகிருஷ்ண மிசன் மண்டபத்தில் நாளை முதல் மூன்று நாட்களுக்கு நடைபெற உள்ளன. (எ-ஐ)

## உயர்தர மாணவருக்கு அழைப்பு

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 1995 ஆம் ஆண்டுக்கான கலை, வர்த்தக, விஞ்ஞானப் பிரிவு மாணவர்களை எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு சமுகமளிக்குமாறு அதிபர் அறிவித்துள்ளார். (ஐ)

## SPOKEN ENGLISH

By **BRITTO**

ஆரம்பம்!
**09 – 09 – 95**
காலை 7மணி

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(சி/2178)

## தனியார் மயத்துக்கு எதிர்ப்பு: வேலை நிறுத்தம் செய்ய தொழிற் சங்கங்கள் முஸ்தீபு

பெருந்தோட்டத் தொழிற் சங்கங்கள் தனியார் மயமாக்கத்தை ஆட்சேபித்து வேலை நிறுத்தம் செய்துள்ளதாக அறிவித்துள்ளன.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரஸ், லங்கா தோட்டத் தொழிலாளர் சங்கம், இலங்கை (செங்கொடி) தோட்டத் தொழிலாளர் சங்கம், கூட்டுத் தோட்டத் தொழிற்சங்கக் கமிட்டி ஆகியன தோட்டங்களின் தனியார் மயமாக்கம் பற்றி அரசாங்கம் தங்களுடன் எதுவித ஆலோசனையும் நடத்தவில்லை என்று குற்றஞ்சாட்டியுள்ளன. (ஓ-க)

## PATRICIAN INSTITUTES

★ City and Guilds London Examination (Year 95/96)
Quantity Surveying (Part - II)
★ Lectures By:
**Mr. S. Ruthiralingam (Eng)**

**Commencing: 09 – 09 – 1995**
Saturday
TIME: SAT, SUN — 6.30 a.m — 8.00 a.m

குறிப்பு:
ஏற்கனவே 10 மாணவர்கள் தம்மைப்பதிவு செய்துள்ளனர். மேற்படி பயிற்சியைப் பெற விண்ணப்பித்த ஏனைய மாணவர் தம்மை உடன் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள்.

— REGISTRAR

59, St. Patrick's Road,
Jaffna.
[C/2180]

நெல்லியடியிலும்...........

# தமிழீழ வைப்பகம்

BANK OF TAMILEELAM

**14-09-1995 முதல் தன் பணியைத் தொடங்குகிறது**

"உங்களுக்காகவே உருவான வைப்பகம்
தந்திடும் பணியில் தன்னிறைவடைவீர்"

- ★ நடைமுறைக் கணக்கு
- ★ தேட்ட [சேமிப்பு] கணக்கு
- ★ நிலையான வைப்புக் கணக்கு
- ★ பிள்ளைகளின் தேட்டக் கணக்கு
- ★ வெளிவரவு நிலையான வைப்புக் கணக்கு

**இத்தனை திட்டங்களும் உங்களுக்காகவே!**

தமிழீழ வைப்பகத்தில் முதலீடு செய்யுங்கள்....

- ★ உங்கள் எதிர்காலம் வளமாக மாறும்
- ★ நாடும் வீடும் பொருண்மிய வலுப்பெறும்
- ★ தமிழரின் வியர்வைத் தேட்டத்தில் தாயகம் அழகுத் தோட்டமாகும்

"உங்களின் உயர்வே எங்களின் குறிக்கோள்"

# தமிழீழ வைப்பகம்

பிரதான சாலை, நெல்லியடி.

"தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்"

[சி/2188]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## மோசடி தோற்கும்

வடபகுதியில் உள்ள இராணுவ முகாம்களுக்கான ஆளணி மற்றும் ஆயுத விநியோகம் பெருமளவில் பாதிக்கப்படவுள்ளதாக கொழும்புப் பத்திரிகைகள் பலவும் செய்திகளும், கட்டுரைகளும் வெளியிட்டுள்ளன.

ஒகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி ஸ்ரீலங்கா கடற்படைக்குச் சொந்தமான இரண்டு "டோறா" பீரங்கிப் [போர்ப்] படகுகளை புலிகள் தாக்கி அழித்த சம்பவம் அரச பாதுகாப்பு வட்டாரங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கும் உண்மை அம்பலமாகி இருக்கிறது.

ஒரு சில நிமிட நேரத்தில் கடற்படையின் பாதுகாவலனாக விளங்கும் இரண்டு டோறாக்களை கடற்புலிகள் எவ்வாறு, எங்கிருந்து, என்ன ஆயுதம் கொண்டு நிர்மூலமாக்கினார்கள் என்பதனைத் தானும் அறிந்து கொள்ளும் சக்தி இல்லாதவர்களாக பாதுகாப்புத்துறை உயர் அதிகாரிகள் தமது தலைகளைப் பிய்த்துக் கொண்டிருக்கிறார்களாம்!

இத்தாக்குதல் அரச படைகளுக்கு விடுதலைப் புலிகள் கொடுத்த அதிர்ச்சி வைத்தியம் என்று இப்பத்தியில் கடந்த வியாழக்கிழமை (31-08-95) எழுதியிருந்தோம். கடற்புலிகளின் தாக்குதல் அதிர்ச்சி வைத்தியம் மட்டுமன்றி அரச படைகளுக்குப் பெரும் தோல்வி என்றும் தெற்கில் இப்போது எடுத்துக் கூறப்படுகிறது; உணரப்படுகிறது.

இது குறித்து நாடாளுமன்றத்தில் உரையாற்றிய முன்னாள் அமைச்சர் பி. தயாரத்னா —

கடற்படையினருக்கு ஏற்பட்ட இழப்புகளை குறைவாக மதிப்பிட முடியாது — என்று சுட்டிக் காட்டியுள்ளார்.

"ஒப்பரேசன் தலைவிதி" என்ற பெரும் படையெடுப்பு ஒன்றை யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீது மேற்கொள்வதற்கு அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்து வரும் வேளையில், அதனைத் தடுத்து நிறுத்தும் விடுதலைப் புலிகளின் உத்திகளில் கடற்புலிகளின் தாக்குதல் முக்கியமானது.

யாழ்ப்பாணத்தின் மீது ஒரு பெரும் தாக்குதலை நடத்தி, ஆயிரக் கணக்கில் தமிழ்ப் பொதுமக்களைக் கொன்று விட்டு, விடுதலைப் புலிகளைப் பலவீனப் படுத்திவிட்டதாகக் கூறி தீர்வு ஒன்றைத் திணிக்கும் திட்டத்தை, அவ்வளவு இலகுவில் நிறைவேற்றிவிட முடியாது என்பதனை ஜனாதிபதி சந்திரிகாவும் அவரது தளபதி அனுருத்தவும் இப்போதாவது உணர வேண்டும்.

போரின் காலம் கூடக் கூட, விடுதலைப் புலிகளின் பலம் பல மடங்கு அதிகரித்திருக்கிறது என்ற ஒரு சிறிய ஆனால் முக்கிய உண்மையைப் புரிந்து கொள்ள முடியாததாலேயே போரின் மூலம் சமாதானம் என்ற மோசடியை சந்திரிகா தொடங்கினார்.

இந்த மோசடி தோல்வியில் முடியும் என்பதனை "ஒப்ரேஷன் தலைவிதி" யைத் ஆரம்பித்ததும் அவர் கண்டுகொள்வார். அதுவே அவரது அரசியல் விதியை முடிவுக்குக் கொண்டு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

# சத்தம் கேட்டதும் படையினர் என நினைத்தோம்
# புலிகளைக் கண்டபின்பே எமக்கு அச்சம் நீங்கியது

## காரைநகரைச் சேர்ந்தவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 7

"துப்பாக்கி வேட்டுச் சத்தங்களை கேட்டு நித்திரையில் இருந்து விடுபட்ட நாங்கள் கப்பலை படையினரே சுற்றி வளைக்கிறார்கள் என்று எண்ணினோம்.

'ஒருவரும் பயப்படாதீர்கள் நாங்கள்தான் வந்திருக்கின்றோம்' என்ற புலிப்போராளிகளின் ஆறுதல் வார்த்தையைக் கேட்ட பின்பே கலக்கம் தெளிந்து எமக்கு நிம்மதி ஏற்பட்டது.

"ஐரிஷ் மோனா" கப்பலில் பயணம் செய்த பயணிகளில் ஒருவரான காரைநகர் சிவன் கோவிலடியைச் சேர்ந்த சுப்பிரமணியம் விஸ்வலிங்கம் [வயது 50] மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிகிச்சை பெறுவதற்காகவும், எள்ளு கொள்வனவு செய்வதற்காகவும் காரைநகரில் இருந்து திருகோணமலைக்கு கடந்த மாதம் 26 ஆம் திகதி சென்றேன்.

சிகிச்சையை முடித்துக் கொண்டும் எள் மற்றும் பல பொருள்களைக் கொள்வனவு செய்துகொண்டும் 28 ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு ஐரிஷ் மோனா கப்பலில் திருகோணமலையில் இருந்து காரைநகர் நோக்கிப் புறப்பட்டேன்.

5.30 மணிக்குப் புறப்பட்ட கப்பல் முல்லைத்தீவுக் கடற் பரப்பில் சென்றுகொண்டிருக்கையில் 29 ஆம் திகதி அதிகாலை 2.15 மணிக்கு துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன.

நித்திரையில் இருந்த நாம் வேட்டுச் சத்தங்களைக் கேட்டு திடுக்குற்று எழுந்தோம்.

கப்பல் நகர்ந்துகொண்டிருப்பது தெரிந்தது. படையினரே எம்மைத் தாக்க முற்படுகின்றனர் என நினைத்தோம்.

முதல் தடவை வெடிச்சத்தங்கள் ஓய்ந்து சுமார் 5நிமிட இடைவெளிக்குப்பின் இரண்டாவது தடவையும் வேட்டுச் சத்தங்கள் கேட்டன. வேட்டுச் சத்தங்களைத் தொடர்ந்து குழந்தைகள், பெண்கள் கூச்சலிட்டனர்.

இரண்டாவது வேட்டுச் சத்தங்களுடன் கப்பல் நகராது நிறுத்தப்படுவதை உணர்ந்தோம்.

### கப்பலுக்குள் ஏறிய புலிகள்

கப்பலுக்குள் துப்பாக்கிகள் சகிதம் ஏறிய மூவர் "நீங்கள் எவரும் ஒன்றுக்கும் பயப்பிட வேண்டாம். நாங்கள் உங்களுக்கு எந்தக் கெடுதியும் செய்யமாட்டோம். நீங்கள் அமைதியாகப் பயமின்றி இருங்கள்" என அறிவித்தனர்.

கப்பல் பின் முல்லைத்தீவுக் கரையை நோக்கி நகர்த்தப்பட்டது. அதிகாலை 5.30 மணிக்கு கரையை அண்மித்ததும் நாங்கள் தரையிறக்கப் பட்டோம்.

இப்படி அவர் கூறினார்.

### காரைநகரில் மக்களின் வாழ்க்கை நிலை

காரைநகரில் மக்களின் வாழ்க்கை நிலை குறித்து அவர் தெரிவித்ததாவது:-

காரைநகரில் தற்போது 200 குடும்பங்களைக் கொண்ட 700 பேர் வரை வசித்து வருகிறார்கள்.

கடற்படையினரின் கட்டுப் பாட்டுக்குள் இருக்கும்எமக்கு, கடற்படையினர் புதிய அடையாள அட்டைகளைத் தந்துள்ளனர்.

அங்கே வேறு எவராவது வந்து தங்குவதானால் கிராம சேவகரும், அங்குள்ள விசாரணைக்குழுவும் சிபாரிசு செய்த பின்பே தற்காலிக அனுமதி அட்டை வழங்கப்படுகிறது.

ஓய்வூதியர், உத்தியோகத்தர் சம்பளம் பெறுவதற்கும், அங்குள்ள ஏனையவர்களின் பணப்புளக்கத்துக்கும் இலங்கை வங்கிக்கிளை ஒன்று இயங்கி வருகின்றது.

### இரவில் வெள்ளை கொடியுடன்

காலை 6 மணியில் இருந்து மாலை 6 மணி வரையுமே மக்கள் நடமாட முடியும்.

இரவு நேரத்தில் அவசிய தேவை ஏதாவது இருப்பின் வெள்ளைக் கொடியைப் பிடித்தவாறு விளக்குடன் செல்லவேண்டும்.

வைத்திய வசதிகள் இல்லாத காரணத்தால், நோய் வாய்ப்பட்டவர்கள் திருகோணமலை ஆஸ்பத்திரிக்கே சிகிச்சைக்கு கொண்டு செல்லப்படுகின்றனர்.

கடிதப் போக்குவரத்துக்கள் கப்பல் பயணம் இருக்கும் போது அநேகமாக இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை இடம்பெறும்.

அப்பகுதிகளில் விடுதலைப் புலிகளின் தாக்குதல் சம்பவங்கள் ஏதாவது இடம்பெற்றால் அனைத்து மக்களும் அழைக்கப்பட்டு நான்கு ஐந்து நாட்களுக்கு கோவில்களில் தங்க வைக்கப்படுவர்.

ஆலயங்கள், திருமண வைபவங்கள் ஏதாவது நடத்துவதானால் படையினரிடம் அனுமதி பெற்றே நடத்த வேண்டும். இப்படி அவர் கூறினார். (இ-15)

## இருவர் 13 நாள், 15 நாள் நிரம்பிய சிசுக்கள்!

யாழ்ப்பாணம், செப். 7

விடுதலைப்புலிகளால் தடுத்து வைக்கப்பட்ட ஐரிஷ் மோனா கப்பலில் பயணம் செய்தவர்களில் 13, நாள், 15 நாள் சிசுக்களும் அடங்குவர்.

இவர்கள் நயினாதீவைச் சேர்ந்தவர்கள்.

நயினாதீவில் ஆஸ்பத்திரி இருந்த போதிலும் அங்கு போதிய வைத்திய வசதி இல்லாததால் தாம் திருகோணமலைக்கே கிளினிக்குக்குச் செல்வதாகவும் —

பிரசவத்துக்காக கடந்த மாதம் திருகோணமலை சென்ற தாம் சிசுக்களைப் பிரசவித்துக் கொண்டுவரும் போதே இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் இச் சிசுக்களின் தாய்மார் தெரிவித்தனர்.

இந்த இரு தாய்மார்களில் ஒருவர் ஜெயராசா புஷ்பமலர் [வயது 34].

தனது 5 ஆவது குழந்தை இதுவெனவும் குழந்தை பிரசவமாகி 15 நாட்கள் எனவும் இவர் கூறினார்.

மற்றவர் தங்கராசா சோதிமணி [வயது 27]

தனது முதலாவது பிரசவம் இது என்றும் குழந்தை பிரசவமாகி 13 நாட்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

எனினும் தாங்கள் மிகுந்த சிறப்பாக விடுதலைப் புலிகளினால் கவனிக்கப்பட்டதாக மிகுந்த சந்தோஷத்துடன் இவர்கள் இருவரும் தெரிவித்தனர். [இ-15]

## இனந்தெரியாதோர் சூடு:

## ஏறாவூரில் சிறுவன் பலி! சிறுமிகள் இருவர் காயம்!!

கொழும்பு, செப். 7

ஏறாவூர் பொலீஸ் பிரிவில் குடியிருப்பு என்ற இடத்தில் கடந்த ஞாயிறு இரவு இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் சிறுவன் ஒருவன் கொல்லப்பட்டான். இரு சிறுமிகள் காயமடைந்தனர்.

இரவு 10 மணியளவில் வீட்டில் ரீ.வி பார்த்துக் கொண்டிருந்த சமயம் இவர்கள் மீது இனந்தெரியாதவர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

வீட்டின் அருகே இராணுவக் காவல் அரண் ஒன்று அமைந்துள்ளது.

டி. ஸ்ரீகாந் [வயது 10] என்ற சிறுவனே இச்சம்பவத்தில் உயிரிழந்தான்.

பாலராஜ் நிலாமதி (வயது 10), செல்வநாயகம் ஜெயராணி [வயது 8] ஆகிய இரு சிறுமிகளும் காயமடைந்த நிலையில் ஏறாவூர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். [ஐ]

## அமைச்சர்களுக்கு எதிராக உறுப்பினர் போர்க்கொடி

### ஆளும்கட்சிக்குள் நெருக்கடி

செயல்திறன் அற்ற முறையில் செயல்படும் அமைச்சரவை ராஜினாமாச் செய்ய வேண்டும்.

இப்படிக் கோரியுள்ளனர் ஆளும் கட்சியைச் சேர்ந்த சில நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

நேற்று நடந்த ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் மாதாந்தக் கூட்டத்திலேயே இக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகாவின் அமைதித்திட்ட யோசனைகளை மூன்று மூத்த அமைச்சர்கள் எதிர்த்து வருவதை அடுத்து ஆளும்கட்சிக்குள் நிலவும் நெருக்கடி, நாடாளுமன்ற உறுப்பினர்களின் இக் கோரிக்கையால் மேலும் மோசமடையலாம் என்று அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டினர்.

அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் தமது பணிகளை சரிவரச் செய்யவில்லை என்று பல உறுப்பினர்கள் குற்றம்சாட்டியுள்ளனர். (இ-8)

## "ஐரிஷ் மோனா"

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு செய்ய முன்வந்துள்ளது.

கொழும்பில் அல்லது திருகோணமலையில் பயணிகளை இறக்க கப்பல் வசதி செய்யப் படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று இங்கு வந்து சேர்ந்த பயணிகளில் காரைநகர், புங்குடுதீவு, நயினாதீவு, எழுவைதீவு, அனலைதீவு, நெடுந்தீவு ஆகிய ஊர்களைச் சேர்ந்தவர்கள் அடங்குவர்.

பயணிகள் ஊர் வாரியாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் சுக நலமுடன் காணப்பட்டனர்.

இவர்களை கண்டு குசலம் விசாரிப்பதற்காக ஏராளமான உறவினர்கள் திரண்டிருந்தனர்.

நான்கு வருடங்களாகப் பிரிந்து வாழ்ந்து நேற்று கூடிய [இவர்களில் பலரும் பலவிதமான உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டனர். சிலர் தேம்பித் தேம்பி அழுதனர். சிலர் குதூகலமாக சிரித்து சந்தோஷமடைந்தனர்.

ஜோன். பொஸ்கோ மகா வித்தியாலயத்தில் தொடர்ந்து தங்கியுள்ள "ஐரிஷ் மோனா" கப்பல் பயணிகளுக்கு வேண்டிய சகல உதவிகளையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் வழங்கினர்.

## நவீன ராடர்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்பர் "டோறா" படகுகளில் பொருத்தப்பட்டுள்ள டெக்கா (DECCA) 926 — 01 அலைவரிசை சாதனங்களையும் கடற்புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

இவ்விரு "டோறா" படகுகளிலும் இருந்து மேலும் பல நவீன கடற்படைச் சாதனங்களும் கைப்பற்றப்பட்டன. (ஐ)

## மாலுமிகளின்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்றன.

மாலுமிகளை விடுதலை செய்வதற்காக விடுதலைப் புலிகள் விதித்துள்ள நிபந்தனை குறித்து இருதரப்பினரும் பேச்சு நடத்தினர். (இ-3)

## பயணிகளை கட்டித் தழுவி--


(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

1990 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தின்பின் உறவினர்கள் ஒருவரை ஒருவர் சந்தித்து கட்டித் தழுவிக்கொண்டது மனதை உருக்கக்கூடியதாக இருந்தது.

இவர்களில் பலரும் காரைநகர், நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, நெடுந்தீவு ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள்.

தீவுப்பகுதிகளில் படையினரும் தமிழ்க் குழுக்களும் நடத்தும் அட்டூழியங்கள் குறித்து இவர்களில் பலரும் கதைகதையாகக் கூறியதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். [இ-15-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முல்லைத்தீவுக் கடலில் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப் பட்ட "ஐரிஷ் மோனா" கப்பலின் தோற்றம்.

## எரிந்த நிலையில் டோறா படகை இழுத்து வந்தனர்

யாழ்ப்பாணம், செப். 7

முல்லைத்தீவு கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது கடற்புலிகளின் தாக்குலுக்குள்ளான டோறா படகுகளில் ஒன்று கடற்புலிகளினால் கைப்பற்றப் பட்டு எரிந்த நிலையில் கடற்கரைப் பிரதேசத்துக்குஇழுத்து வரப்பட்டது.

புலிகளிடம் இருந்த வாட்டர் ஜெற் படகுகளில் ஒன்றே இந்த டோறா படகை கரைக்கு இழுத்து வந்தது. (இ)

## இலங்கை வங்கிக்கு தீ வைக்கத் திட்டமாம்

### தமிழ் ஊழியர் கைது

கொழும்பு, செப். 7

கொழும்பில் உள்ள இலங்கை வங்கித் தலைமை யகத்திற்குத் தீவைக்கத் திட்டமிட்டதாகச் சந்தேகித்து தமிழ் இளைஞர் ஒருவரைப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

இலங்கை வங்கித் தலைமை அலுவலகத்தில் பணி புரியும் இந்த இளைஞன் 6 மாத காலத்துக்கு மேலாக சிறிது சிறிதாக பெற்றோலை வாங்கி கட்டடத்துக்குள் கொண்டு சென்றிருக்கிறார் என்று பொலீஸார் சந்தேகின்றனர்.

பொலீஸார் மேலும் பலரை விசாரணை செய்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

# படையை சமருக்கு அழைக்கவே "ஐரிஷ்மோனா"வை கடத்தினோம்!

## கடற்புலி விசேட தளபதி கல்யாணி தகவல்

யாழ்ப்பாணம், செப். 7

கடற்படையினரை ஒரு கடற்சமருக்கு அழைப்பதற்காகவே "ஐரிஷ் மோனா" கப்பலை கைப்பற்றினோம்.

— கடற்புலிகளின் மகளிர் படையணியின் விசேட தளபதி செல்வி கல்யாணி இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு கடற்பரப்பில் கடந்த 29 ஆம் திகதி கடற்படையினரின் டோறா படகுகள் தாக்கப்பட்ட சமரில் கடற்புலிகளுடன் கடற்புலிகளின் மகளிர் படையணி முக்கிய பங்கு வகித்தனர்.

இத்தாக்குதல் தொடர்பாக விசேட தளபதி செல்வி கல்யாணி மேலும் தெரிவித்திருப்பதாவது:-

முல்லைத்தீவுக் கரையில் இருந்து 15 கடல் மைல் தொலைவில் வைத்து 'ஐரிஷ் மோனா' கப்பலை நாம் கைப்பற்றினோம்.

கடற்படையினரை ஓர் கடற் சமருக்காக எம்மை நோக்கி அழைக்கவே இதனைச் செய்தோம்.

கடற்புலிகள் மகளிர் படையணியே அதனைக் கைப்பற்றியது.

நாம் எதிர்பார்த்தவாறே கடற்படையினர் எம்மை நெருங்கி வந்தனர். பின்னர் அங்கு நடந்த இரு சமர்களில் அவர்கள் இரண்டு டோறாக்களையும் இழந்தனர்.

இச்சமரில் எமது தரப்பில் எதுவித இழப்புகளும் ஏற்படவில்லை.

இச்சமரில்ஒரு 'டோறாவை' மூழ்கடித்த நாம் மற்றைய டோறாவை மக்களின் ஒத்துழைப்புடன் மீட்டுள்ளோம்.

— என்றார். [ஐ]

### இரு பெண்—

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடற்புலிகளின் பாதுகாப்பில் தற்போது உள்ளனர்.

இந்தக் கைதிகள் பரிமாற்றம் தொடர்பாக செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளுடன் விடுதலைப் புலிகள் நேற்றுப் பேச்சு நடத்தினர்.

தமது கோரிக்கையை அரசாங்கத்திடம் தெரியப்படுத்துமாறு அவர்கள் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவினரைக் கேட்டுள்ளனர். (ஐ)

### நான்கு....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பீரங்கிப்படகும், மற்றொரு டோறா பீரங்கிப்படகும் விடுதலைப்புலிகளால் மூழ்கடிக்கப்பட்டன.

இவ்விரு படகுகளில் இருந்தும் கடற்புலிகள் கைப்பற்றிய கனரக ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

★ 20 எம்.எம். பீரங்கிகள் — 04
★ பெருமளவு 20 எம்.எம். பீரங்கி ஷெல்கள்
★ 50 கலிபர் துப்பாக்கிகள் — 04
★ பி.கே.எல்.எம்.ஜி — 04
★ 303 எல். எம். ஜி — 01
★ ஏ. கே துப்பாக்கி — 10

(ஐ)

### நெல்லியடியில் தமிழீழ வைப்பகம்

தமிழீழ வைப்பகத்தின் கிளை ஒன்று எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை காலை8 மணிக்கு நெல்லியடியில் ஆரம்பிக்கப்பட உள்ளது.

### சைவநெறி தேர்வு

யாழ்ப்பாணம், செப் 7

எதிர்வரும் நவம்பர் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள சைவ பரிபாலன சபையின் சைவ நெறித் தேர்வுக்குரிய விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய இறுதி நாள் இம்மாதம் 15 ஆம் திகதி என்று அறிவிக்கப்படுகிறது. (எ)

## புலிகளுக்கு எதிரான தாக்குதல்கள் நிறுத்தப்படமாட்டா — அனுருத்த

கொழும்பு, செப். 7

விடுதலைப்புலிகளுக்கு எதிரான தாக்குதல்கள் தொடர்ந்து நடக்கின்றன. போர் நிறுத்தப்பட்டுவிட்டதாக அல்லது முடிவுக்கு வந்துவிட்டதாக கூறப்படுவதில் எவ்வித உண்மையும் இல்லை.

இவ்வாறு தெரிவித்தார் பாதுகாப்பு பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்த.

ரூபவாஹினிக்கு நேற்று அளித்த விசேட பேட்டியின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

உகந்த மூலோபாயத்துடன் உரிய முறையில் வகுக்கப்பட்ட திட்டப்படி இராணுவ நடவடிக்கைகள் நடந்து வருகின்றன.

போரின் இறுதி இலக்கை அடையும் வரை அதனைத் தொடர்ந்து நடத்துமாறு ஜனாதிபதி மிகத் தெளிவான உத்தரவை வழங்கியிருக்கிறார்.

அதன் பிரகாரம் கட்டம் கட்டமாக வெவ்வேறு விதமாக வடக்கு - கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் தொடர்கின்றன.

இராணுவ நடவடிக்கைகள் அவற்றின் பெறுபேறுகள் குறித்த எல்லா விவரங்களையும் நாம் வெளியிட முடியாது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் எவ்வித மாற்றமும் இன்றித் தொடர்கின்றன; அவை நிறுத்தப்படமாட்டா — என்று சொன்னார். [அ]


யாழ். ஸ்ரீதர் அகலத்திரையில்

தினசரி 6-30 காட்சி மட்டும்

கடல் கரும்புலி

மேஜர் நகுலனின்

உயிர்ப்பூ

இவர் இப்படத்தில் கரும்புலியாக காட்சியளித்தது போன்றே புல்மோட்டைக் கடலில் 3-9-95 அன்று அதிவேக பீரங்கிப் படகான டோறாவைத் தாக்கி அழித்து வீரகாவியமானார் என்பது குறிப்பிடத்தக்கது.

தினசரி 2-30, 4-30,
சனி, ஞாயிறு 10-30, 2-30, 4-30

நிதர்சனமும்,
மட்டு-அம்பாறை சிறப்புப் படையணியும்
இணைந்து வழங்கும்

சி. சேரனின்

உறங்காத கண்மணிகள்

[வேவுப்புலி வீரரின் உண்மைக் கதை - கலர்]

[சி/2882]



### பொலிஸ் நிலையத்தில் பார்சல் குண்டு

கொழும்பு, செப். 7

மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த பார்சல் குண்டு ஒன்று அது வெடிப்பதற்கு முன்னரே நேற்றிரவு மீட்கப்பட்டதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

2 கிலோ எடையுள்ள இந்தக் குண்டு இரவு 7.30 மணிக்கு வெடிப்பதற்காக வைக்கப்பட்டது(டைம்பொம்) என்றும்—

ஆனால் அது குறித்துத் துப்புக் கிடைத்ததால் இரவு ஏழு மணிக்கே செயலிழக்கச் செய்து வெடிக்க வைக்கப்பட்டது என்றும் — பொலீஸ் தரப்பில் மேலும் தெரிவிக்கப் பட்டது. (அ)



அனலைதீவைச் சேர்ந்த பெண் ஒருவர் குழந்தையுடன் காணப்படுகிறார்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 192/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 07-09-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org